# <u>பத்திரிக்கைச் செய்தி</u>

கோயமுத்தூர் ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புத்துறை அலுவலகத்தை புகார்தாரர் அணுகி தான் தற்காலிக பட்டாசு கடை துவங்குவதற்கான அனுமதி கேட்டு விண்ணப்பிருந்ததாகவும், விண்ணப்பத்தின் மீது மேல்நடக்கை எடுக்க கோயமுத்தூர் தெற்கு பிரிவு, நிலைய தீயணைப்பு அதிகாரி திரு.சசிகுமார், அவர்கள் தனக்கு ரூ.6,000/- கையூட்டாக கொடுக்க வேண்டும் என வற்புறுத்துவதாகவும் அதனால் தக்க நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றும் புகார் அளித்தார். இப்புகாரின் பேரில் வழக்கு பதிவு செய்யப்பட்டு இன்று 24.10.2020 பொறிவைப்பு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது.

மேற்படி பொறிவைப்பு நடவடிக்கையின்போது கோயமுத்தூர், தெற்கு பிரிவு நிலைய தீயணைப்பு அதிகாரி திரு.சசிகுமார் புகார்தாரரிடமிருந்து ரூ.6,000/- கையூட்டாக வாங்கும்போது ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புத்துறை அலுவலர்களால் கைது செய்யப்பட்டார்.